**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை - 2018**

---

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு**

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிகூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

----------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

------------------------------------------------------------------------------------------------

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும்

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் நிதிக்கூற்றுக்களில் பொது விடயங்களின் குறிப்பு இலக்கம் 2.3.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணனி மற்றும் உபகரணங்கள் 25 சதவீதத்திற்கு பெறுமானத் தேய்விடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 20 சதவீதம் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தமையால் கணனி மற்றும் உபகரணங்கள் பெறுமானத் தேய்வானது ரூபா 126,485 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | பெறுமானத் தேய்வை கணிப்பிடும்போது இப்பிழைகள் ஏற்பட்டுள்ளது. இப்பிழைகள் 2019 நிதிக்கூற்றுக்களில் சரிசெய்யப்படும். | கணக்கீட்டு கோட்பாடுகளின் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையின் நிதிக்கூற்றுக்களில் பொது விடயங்களின் குறிப்பு இலக்கம் 2.3.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்திய மோட்டார் வாகனங்களுக்காக 20 சதவீதமான பெறுமானத் தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2013 ஜனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 24,200,000 தொகைக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட 10 வருடங்கள் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்களுக்காக 10 சதவீத பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தமையால் பெறுமானத் தேய்வுகள் ரூபா 2,420,000 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தன. | பெறுமானத் தேய்வை கணிப்பிடும்போது இப்பிழைகள் ஏற்பட்டுள்ளது. இப்பிழைகள் 2019 நிதிக்கூற்றுக்களில் சரிசெய்யப்படும். | கணக்கீட்டு கோட்பாடுகளின் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்பட்டிருந்த செயற்திட்டமொன்றிலிருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 2,323,225 தொகை கடன் பட்டோராக கணக்கு வைக்கப்படாது முற்பணமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டம் ஆரம்பிக்கும்போது முற்பணமாக நிதி வழங்கப்பட்டது. இதனால் முற்பணமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது சம்பத்தப்பட்ட நிறுவனம் அவ்வப்போது தவணையடிப்படையிலும் இறுதியில் 31 டிசம்பர் 2018 இலும் தவணைக்கட்டணம் செலுத்தியது. இறுதி வருமதி தொகை 2019 ஆண்டு கடன் பட்டோர் கணக்கிற்கு மாற்றப்படும். | சபைக்கு அறவிடப்பட வேண்டிய தொகை முற்பணமாக காட்டப்படலாகாது. இவை கடன் பட்டோராக கணக்கு வைக்கப்படவேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 158,853 தொகையான உத்தியோகபூர்வ இலட்சினைகள் மற்றும் டோனர் ஆகியவற்றை கொள்வனவு செய்தமைக்கான செலவினம் மீளாய்வாண்டிற்கான செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | இது கணக்கீட்டு தவறு அல்ல , நிதி முடிவுகளில் பாதிப்பினை ஏற்படுத்தாது. | செலவினங்களை முற்பணமாக காட்டப்படலாகாது. இவை இந்த ஆண்டுக்குரிய செலவினங்களாக காட்டப்பட வேண்டும். |
| (இ) | 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 12,900,000 தொகைக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டு இன்றளவில் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த மோட்டார் வாகனங்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 2,010,000 தொகைக்கு பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தன. | இது 2019 நிதிக்கூற்றுக்களில் சரிசெய்யப்படும். | பெறுமானத் தேய்வு கணிப்பின்போது முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த சொத்துக்களுக்கு தேய்வு கணிப்பிடலாகாது. |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுமதி சேர் வரிக் கணக்கின் 2013 ஆம் ஆண்டு முதல் காணப்பட்ட பெற வேண்டிய மீதியான ரூபா 104,676,878 தொகை தீர்ப்பனவு | இந்தத் தொகையில் ரூ.28,659,649 உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் 2004 முதல் 2006 வரை | உடனடியாக தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்ட மதிப்பீடுகளிலும் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. இத்தெகையினை மீழப்பெற அல்லது உறுதிப்படுத்த ஈடிபி தொடர்நது உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு கடிதம் எழுதியதுடன் ,நிதிப்பிரிவின் அலுவலகர்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சென்றுள்ளனர், இருப்பினும் இத்தொகை மீழபெற அல்லது உறுதிப்படுத்த முடியவில்லை. | |
| (ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டு வரப்படுகின்ற ஊவா மாகாணத்தின் விவசாய ஏற்றுமதி வலயத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 10,403,683 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | உடனடியாக திரும்ப பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 1999 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் ஏனைய பன்னிரெண்டு கடன் பட்டோரிடமிருந்து ரூபா 4,441,903 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | தவணைகளாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அலுவலகம் நடாத்திச் செல்லப்படும் டிஎச்பிஎல் கட்டிடத்திற்கான வருடாந்த வாடகை ரூபா 60,750,000 ஆன போதிலும், வருடாந்த பாதீட்டினை தயாரிக்கும் போது ரூபா 12,750,000 இனால் குறைவாக குறிப்பிடப்பட்டமையும், முன்னைய ஆண்டிலும் திறைசேரியிலிருந்து குறைவான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டமையாலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளாடியாக செலுத்த வேண்டிய கட்டிட வாடகை ரூபா 30,375,000 ஆகும். | திறைசேரி ஒதுக்கீட்டின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பாதீட்டில் 46.25 மில்லியன் கட்டிட வாடகைக்காக திறைசேரி நிதியிலிருந்து ஒதுக்கப்படடுள்ளன. செலவீன வேறுபாடு குறை ஏனைய வருமானம் ஊடாக தீர்க்கப்பட்டுள்ளது, 2017 ஆம் ஆண்டின் குறைவான திறைசேரி நிதியிலிருந்து ஒதுக்கீடின் காரணமாக 2018 ம் ஆண்டிற்கான கட்டிட வாடகைக்காக குறைவாக ஒதுக்கீடப்பட்டிருந்தது .நிதி அமைச்சு பாதீடப்பட்ட நிதியினை 14-மே-2019 திகதியிடப்பட்ட கடிதத்தின் படி வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. | பாதீட்டினை தயாரிக்கும் போது கட்டிட வாடகை மதிப்பீட்டுடன் சேர்க்கப்பட வேண்டும். பாதீட்டில் ஒதுக்கப்படடுள்ள நிதி பற்றாக்குறையாக காணப்படின் அக்குறையினை ஈடுசெய்ய மேலதிக ஏற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 396 | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கடன் கொடுத்தோருக்காக வழங்கப்பட்ட 06 மாதங்களை கடந்த ரூபா 586,046 தொகையான மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஈடிபி கொள்கைகளின் படி சமர்ப்பிக்கப்படாத காசோலைகளை 03 வருடங்கள் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் கணக்குகளில் காட்டப்பட்டன. பின்னர் உரிமை கோராத காசோலைகள் ஏனைய வருமான கணக்கிற்கு மாற்றப்படும். | நிதி ஒழுங்குமுறைக்கு இணங்க வேண்டும். காலாண்டு நிதிக்கூற்றுக்கள் அரச கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பந்தி | காலாண்டொன்று நிறைவடைந்து 30 நாட்களினுள் வரிசை அமைச்சிற்கும் அரச முயற்சிகள் திணைக்களத்திற்கும் காலாண்டு ரீதியான செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓவ்வெரு காலாண்டொன்று நிறைவடைந்து 30 நாட்களினுள் வரிசை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டன. | காலாண்டு செயற்திறன் அறிக்கைகள் அரச கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 99,415,402 தொகையான நட்டம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 20,282,474 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 79,132,928 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.துணைக்கம்பனியின் முதலீட்டின் இருந்து நட்டம் ரூபா 91,185,567 ஏற்பட்டமை வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும்.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சபையின் பிரதான வருமானமானது 41 சதவீதத்தால் அதிகரித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டின் இந்த வளர்ச்சிக்கான பிரதான காரணம் திறைசேரி பற்றுச்சீட்டு அதிகரித்தமை ஆகும்.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பெற வேண்டிய இதர வருமானங்கள் 52 சதவீதத்தால் சரிவடைந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பெற வேண்டிய பிற வருமானங்கள் 27 சதவீதத்தால் சரிவடைந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பங்கிலாப வருமானம் 33 சதவீதத்தால் சரிவடைந்த காரணத்தால் ஏற்பட்டதாகும்.

(ஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது துணைக்கம்பனியான டிஎச்பிஎல் முதலிட்ட பங்கின் இலாபம் 220 சதவீதத்தால் சரிவடைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை 35 கம்பனிகளின் சாதாரணப் பங்குகளில் மற்றும் 29 கம்பனிகளின் முன்னுரிமைப் பங்குகளில் முதலீடு செய்துள்ளதுடன், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அந்த மீதிகள் முறையே ரூபா 58,312,483 தொகை மற்றும் ரூபா 105,066,208 ஆகும். மீளாய்வாண்டின் போது அவற்றுள் மூன்று கம்பனிகளில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 14,418,550 தொகையான முதலீடுகளின் அடிப்படையில் ரூபா 3,952,557 ஆன பங்கிலாபம் கிடைத்திருந்ததுடன், எஞ்சிய சாதாரண பங்குகளில் முதலீடு செய்த கம்பனிகளிடமிருந்து மற்றும் முன்னுரிமைப் பங்குகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்த 29 கம்பனிகளிலான முதலீடுகளிலிருந்து எவ்வித பங்கிலாபமும் கிடைத்திருக்கவில்லை. மேலும், இந்த முதலீடுகளில் ரூபா 17,315,000 கூட்டுத்தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த 3 கம்பனிகள் 2002, 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளி போது கலைக்கப்பட்டிருந்ததுடன், கலைப்பவரால் | கம்பனிப்பதிவாளரால் கம்பனி பதிவிலிருந்து 11 கம்பனிகள் தரப்பட்டுள்ளன ,சபைக்கு ஆவணங்களை சரிபார்ப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளது, இரு கம்பனிகளின் செத்துக்கள் அரசஉடமையானதாகவும் ,இரு கம்பனிகள் மீண்டும் செயற்படுகின்றன மற்றைய ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் | சபை நிதியினை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் . மற்றும் கம்பனிகளினது இலாப நோக்கத்தை சரிபார்க்க வேண்டும். |

பங்குகளில் முதலீடு செய்த பணத்தை மீள செலுத்த சொத்துக்கள் இல்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், கம்பனிகள் பதிவுப் பெயர்ப்பட்டியலிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்த 25 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 58,587,917 தொகையை அறவிட முடியாதிருந்ததுடன், சபையினால் முதலீடுகளை கால ரீதியான மீளாய்வு செய்து ஏற்படக்கூடிய மூலதன நட்டத்தினை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 மே 14 ஆந் திகதி முதல் மே 17 ஆந் திகதி வரையிலும் நெதர்லாந்தில் இடம்பெற்ற ஏற்றுமதி மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 25 ஏற்றுமதியாளர்களை பங்குபற்றச் செய்வதற்கு ரூபா 6.8 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ரூபா 4.5 மில்லியன் செலவிடப்பட்டு பங்குபற்றியிருந்தது 19 பேர் மாத்திரமாவதுடன், பங்குபற்றியோரில் 8 பேர் ஏற்றுமதி சந்தையில் பங்குகளை உரித்தாக்கிக்கொள்ள முடியாதிருந்ததாகவும், அதில் பங்குபற்றியமையால் தமது நோக்கங்களை அடைந்துகொள்ள முடியாது போனதாகவும் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் கண்காட்சியில் பங்குபற்றியோரால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய மற்றும் கைப்பற்றப்பட வேண்டிய செயன்முன்னேற்றம் தொடர்பில் சபையுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | 19 கம்பனிகளை தேர்ந்தெடுப்பதற்காக குறிப்பிட்ட நாடுகளின் தூதரகங்களின் ஆலோசனை மற்றும் நிலையான சந்தை சாத்தியப்பாட்டினை கருத்தில் கொள்ளுதல். ரூபா. 175,000 சேமிக்கப்பட்டுள்ளது ,சுங்கத்திணைக்களத்தின் தகவல்களின்படி பங்குபற்றிய 19 கம்பனிகளில் தொழில்னுட்ப மற்றும் சுற்றுலாத்துறை சார்பான 07 கம்பனிகளின் ஏற்றுபதி வருவாய் அதிகரிக்கப்படவில்லை. இதுவரை ஏற்றுபதி மேற்கொள்ளாத மற்றும் பொருத்தத்தன்மையினையும் கருத்தில்கொண்டு ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஒரு வாய்ப்பினை வழங்கியது. இந்தத்திட்டத்தின் வெளியீடானது தகவல் தொடர்பாடல் திறன் மற்றும் பங்கேற்ற கம்பனிகளின் அனுபவம் அறிவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. பங்கேற்ற நிறுவனங்களிடத்தும் சாதகமான முடிவுகளை எதிர்பார்ப்பது கடினம். இருப்பினும் இத்திட்டத்திலிருந்து இலங்கை ஜிஎஸ்பி+ வரி சலுகையினை மேம்படுத்தும் திறனை கொன்டிருக்கலாம். | சபை 50 சதவீதமான ரூ75,000.00 விமான டிக்கட்டுகளை திருப்பிச் செலுத்தியது , எனவே பங்கேற்பாளர்களுடன் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014 யூலை 11 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி இலக்கம் 1870/71 இன் மூலம் தேசிய கரிம கட்டுப்பாட்டு பிரிவொன்று சபையில் தாபிக்கப்பட்டிருந்ததுடன், 3 வருடங்கள் கடந்ததன் பின்னர் அதாவது 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 2017/8/74 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் பிரகாரம் ரூபா 750,000 செலுத்தும் அடிப்படையில் அதற்காக மதியுரையாளர் ஒருவர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், குறித்த உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 750,000 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் தேசிய கரிம பிரிவினை சுயாதீனமானதொரு அலகாக பேணப்பட வேண்டும் என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இது விவசாயப் பிரிவின் கீழ் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. மேலும், மதியுரைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுக்கள் காலாண்டிற்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது ஒரு மதியுரைக் குழு மாத்திரம் நடாத்தப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப குழுக் கூட்டமொன்று இடம்பெற்றிருக்கவில்லை. மேலும், 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 155,149 தொகையும் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 136,149 தொகையும் இதற்காக செலவிடப்பட்டிருந்ததுடன், 100 விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும், எந்தவொரு நிறுவனத்திறகும் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்பக் குழு, இல 1324 இன் கீழ் எடுக்கப்பட்ட அனைத்து முடிவுகளும் 2019 பெப்ரவரி க்கு முன்னர் வெளியிடாது வைத்திருந்து தொழில்நுட்பக் குழு 2019 மார்ச் மாதம் வழங்கியிருந்தது. 2019 மார்ச் மாத கூட்டத்தின் பின் பதிவுசெய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. தொழில்நுட்பக்குழுவின் அனைத்து முடிவுகளும் இல 1324 இன் படி எடுக்கப்பட்டன. | தேசிய கரிம கட்டுப்பாட்டு பிரிவொன்றின் முக்கிய நோக்கம் பதிவுச் சான்றிதழ் வழங்குதலே ஆகும். உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க வலயங்களில் உணவுக்கான சந்தைப்பங்கினை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் 2018 பெப்ரவரி 18 முதல் 22 வரை இடம்பெற்ற Gulf Food உணவுக் கண்காட்சிக்கு ரூபா 11.67 மில்லியன் செலவிடப்பட்டு 24 கம்பனிகள் பங்குபற்றச் செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 09 கம்பனிகளின் ஏற்றுமதி அளவானது 1 முதல் 51 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. | 2018 ஆம் ஆண்டில் நிலவிய வறண்ட காலநிலை காரணமாக தேங்காய் ,தேயிலை மற்றும் பிற விவசாய உற்பத்திப் பொருட்களுக் கான விலை அதிகரிக்கப்பட்டது , இதனால் சர்வதேச சந்தையில் போட்டி குறைவடைந்ததோடு தேயிலையின் சர்வதேச சந்தையில் தேயிலை ஏற்றுமதி நிறுவனங்களின் ஏற்றுமதி குறைந்துவருவது | வர்த்தகக் கண்கட்சியின் நோக்கங்களை அடைவதற்கு ஏற்றுமதியாளர்களிற்கு சபை நிதி உதவிகளை வழங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறிப்பிடத்தக்கது. இது ஈரான், சிரியா , லிபியா, மற்றும் பிற தேயிலை ஏற்றுமதி நாடுகளிடையிலான கணிசமான போட்டித்தன்மையினை பாதிக்கின்றது. | |
| (ஈ) | மீன் மற்றும் மீன் உற்பத்தி தொடர்பில் சந்தை பறிமாற்றங்களை அதிகரிக்கும் நோக்கில் 2018 ஏப்ரல் 24 ஆந் திகதி முதல் ஏப்ரல் 26 ஆந் திகதி வரை பெல்ஜியத்தின் பிரேசிலில் இடம்பெற்ற (சீ புட் எக்ஸ்போ கோல்ட்) வியாபாரக் கண்காட்சிக்கு 09 ஏற்றுமதியாளர்கள் பங்குபற்றச் செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 05 கம்பனிகளுக்காக நான்கு தடவைகளுக்கு மேற்பட்ட தடவைகள் அனுசரணை வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய புதிய ஏற்றமதியாளர்களுக்கு சந்தர்ப்பமளித்தல் தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மற்றும் ஒரு தடவை மாத்திரம் பங்குபற்றிய ஏற்றுமதியாளர்களுக்கு கண்காட்சி தள வாடகை மற்றும் கண்காட்சிக் கூட கிரயங்களுக்காக 100 சதவீத அனுசரணை வழங்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான 2 கம்பனிகளுக்காக 50 சதவீத அனுசரணை வழங்கப்பட்டிருந்தது. அனுசரணை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே கண்காட்சியில் பங்குபற்றிய 05 கம்பனிகளின் ஏற்றுமதி அளவினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 5 சதவீதத்திலிருந்து 52 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. | கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டில் மீன் விநியோகம் குறைந்துள்ளது. ஏற்றுமதி கம்பனிகள் விற்பனையாளர்களிடமிருந்து மீன்களை விநியோக அளவை பொறுத்து பெறுகின்றன. | வழங்கள் பற்றாக்குறையால் ஏற்றுமதி குறைக்கப்படுவதால், ஏற்றுமதி துறைக்கு புதிய மீன் உற்பத்தி தயாரிப்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 குறைப்பயன்பாடுடைய நிதியங்கள்

---------------------------------------------------

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், 2018 ஆம் ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்படாத 16 நிகழ்ச்சித்திட்டங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அதற்கான நிதி ஒதுக்கீடு ரூபா 15.25 மில்லியன் ஆகும். | கொள்முதல் குழு முடிவுகள் , பொருத்தமான ஆலோசகரை அடையாளம் காண்பதில் கேள்வி மற்றும் செலவு சம்பந்தமான சிக்கல்கள் இந்த திட்டங்களை செயற்படுத்த | பாதிப்பு சிக்கல்களில் சிறப்பு கவனம் செலுத்தி ஒரு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

காரணமாக இருக்கலாம்.

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

-----------------------------------------

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 72 ஆன போதிலும், உள்ளபடியான பதவியணி 224 ஆனமையால் 48 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன், அவற்றுள் சிரேஷ்ட மட்டத்திலான 15 பதவிகளும் 18 இடைநிலை மட்டத்திலான பதவிகளும் 11 ஆரம்ப மட்டத்திலான பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன. | 31 டிசம்பர் 2018 ஆம் ஆண்டில் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் 272 , ஆனால் உண்மையான உழியர்கள் தொகை 224 மறறும் 48 பதவிகள் வெற்றிடமாக இருந்தன, ஏற்றுமதி மேம்பாட்டு சபையின் 15 நிர்வாக பதவிகள் அனுமதிக்கப்பட்டன. இதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது, ஏனைய பதவிகள் 2019 மே 09 நிரப்பப்பட்டன. ஏனைய உதவி இயக்குனர் ,ஏற்றுமதி மேம்பாட்டு அதிகாரி மற்றும் கணணி நிலை அதிகாரி பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | தொடர்புடைய பதவிகளை அடையாளம் காணவும், அவ் வெற்றிடங்களை நிரப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |